**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 46/2015 தேதி- 09.09.2025

(D.W.1) - ரமேஷ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தர்க்க சொத்தின் பழைய சர்வே எண் 2999 என்றால் இந்த சர்வே எண்ணில்தான் வருகிறது என கூறுகிறார்கள். அதனுடைய ரீசர்வே எண் 89/4 பி என்றால் சரிதான். தாவா சொத்து 9 1/4 சென்ட் சொத்து என்றால் சரிதான். அருமைநாயகம் மகன் செல்லப்பன் மற்றும் வேலாயுதநாடார் மகன் குமாரசாமி நாடார் சேர்ந்து ஆவண எண் 3118/1962 ன்படி 75 சென்ட்டும் ஆவண எண் 3119/1962 ன்படி 25 சென்ட்டும் சேர்ந்து மொத்தம் 1 ஏக்கர் சொத்தை விலை வாங்கினார்கள் என்றால் சரிதான்.

ஆவணப்படி 1 ஏக்கர் வாங்கியிருந்தாலும் கிடப்புப்படி 1 ஏக்கர் 10 சென்ட் இருக்கிறது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் சொத்தை விலைக்கு வாங்கிய ஜென்மிகள் விற்றுவிட்டார்கள் என்பது என்னுடைய தர்க்கம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 11 நான்தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான்தான் தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 11 ல் பி பட்டிகை சொத்து 3 ஏக்கர் 40 சென்ட் என்றால் சரிதான். அதில் சி பட்டிகை சொத்தானது பி பட்டிகை சொத்தின் தெற்கணைய இருக்கும் 5 சென்ட் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 11 ஆவணத்தில் 3 ஆம் பிரதிவாதி தங்கப்பன் எனது அப்பா என்றால் சரிதான். எனது அப்பா என்ன தர்க்கம் செய்தார் என்பதைக் காண்பிக்க அவரது எதிருரையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புரைதான் பி.வா.சா.ஆ- 12 என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ- 12 ஆவணத்தை படித்து பார்த்துதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ- 12 ஆவணத்தில் எனது அப்பா தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கத்தை குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் 9 ஆம் பக்கத்தில் 9 முதல் 13 வரையுள்ள வரிகளில் எனது அப்பா தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கத்தில் பழைய சர்வே எண் 2999 என கீழ்மிடாலம் கிராமத்திலுள்ள 3 ஏக்கர் 40 சென்ட் விஸ்தீரணம் உள்ளது என்றும் ஆனால் கிடப்பின்படி அதைவிட கூடுதலாக விஸ்தீரணம் இருப்பதாக கூறியுள்ளார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

எல்லா சர்வே நம்பர்களிலும் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணம் ஆவணங்களில் இருப்பதைவிட கூடுதலாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ- 12 ஆவணத்தில் 10 ஆம் பக்கத்தில் வாதிகுறிப்பிடும் ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என்றும் ஆவணங்கள் அடிப்படையில் வாதிக்கு எந்த உரிமையும் கிடைக்காது என கூறியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. தங்கமணியும் திரவியமும் குமாரசாமி நாடாரின் வாரிசுகளா என்றால் தங்கமணி என்பவர் குமாரசாமியின் மனைவி, திரவியம் அவருடைய மகன் ஆவார்.

பி.வா.சா.ஆ. 3 ஆவணப்படி தங்கமணி மற்றும் திரவியமும் சேர்ந்து ஜெசிந்தாமேரி என்பவருக்கு 13 சென்ட் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 3 ஆவணத்தில் 17 சென்டை தனதில் நீக்கி கிரையம் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. பி.வா.சா.ஆ- 3 ஆவணத்தில் ஒரு வரைபடம் இணைக்கப்பட்டிருக்கிறதா என்றால் இணைக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த வழக்கில் எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்து 9 1/4 சென்ட் சொத்து என்னுடைய சொத்திற்கு உட்பட்டது என்று கூறி அதற்கு நீதிமன்ற கட்டணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். பழைய சர்வே எண் 2999 சொத்தை யாரிடமிருந்து விலைக்கு வாங்கினேன் என்றால் தங்கமணி மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து விலைக்கு வாங்கினேன். அதுதான் 38 சென்ட் சொத்து என்றால் சரிதான். செல்லப்பனிடமிருந்தோ அவரது அவகாசிகளிடமிருந்தோ நான் சொத்தை விலைக்கு வாங்கவில்லை.

பி.வா.சா.ஆ- 7 ஆவணத்தில் 2 வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இணைக்கப்பட்டுள்ளது. அந்த 2 வரைபடமும் அந்த வழக்கின் செல்லப்பனின் அவகாசத்தை வாக்கால் பாகம் செய்ததை நிருபிக்க போடப்பட்ட ஆவணம் என்றால் நான் 15 சென்ட் சொத்தை செல்லப்பன் அவருடைய மகன் ஜெயக்குமாருக்கு கொடுத்ததை உறுதி செய்வதற்காக தாக்கல் செய்துள்ளேன். செல்லப்பனுடைய சொத்தை குமாரசாமியும் அவருடைய வாரிசுகளும் விற்பனை செய்ய உரிமையில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் விலை வாங்கியது குமாரசாமியிடமிருந்து என்றால் சரிதான். செல்லப்பனின் அவகாசத்திலிருந்து நான் விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான்.

எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண் 105/2010 ல் ஆணையர் அளவிட வரும்போது நான் அங்கு இருந்தேன என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாலுக் சர்வேயர் வந்து அளந்தார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அசல் வழக்கு எண் 105/2010 ல் எனது அம்மாவும் சகோதரர்களும் பிரதிவாதிகள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

ஆணையர் வரைபடத்தில் பஞ்சாயத்து ரோட்டை காண்பித்துள்ளார் அந்த ரோட்டிற்கு எந்த பக்கம் எனது சொத்து இருக்கிறது என்றால் வடக்கும் தெற்கும் இருக்கிறது. 1993 ல் இடத்தை வாங்கும்போது ரோடு அங்கு இல்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தின்படி 1 ஏக்கர் 10 சென்ட் இருப்பதில் 9 1/4 சென்ட்தான் தாவா சொத்து என்றால் சரியல்ல. செல்லப்பன்நாடாருக்கு ரீசர்வே எண் 89/4 பி 58.770 சென்ட் சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த 58.770 சென்ட் சொத்தில்தான் தாவா சொத்து வருகிறது என்றால் சரியல்ல.

பழை ய சர்வே எண் 2999 வரும் புதிய சர் வே எண் அனைத்தும் என்னுடைய சொத்து என்பதுதான் என்னுடைய தர்க்கம் என்றால் எனக்கும் மற்றவர்களுக்கும் உரிமையுள்ளது. எனக்கு 38 சென்ட் சொத்தும் மற்றவர்களுக்கு அவர்களுக்கு உரிமைப்பட்ட சொத்தும் இருக்கிறது என்றால் சரிதான். எனது சொத்தான 38 சென்ட் சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமித்து அளந்து நிருபிக்க மனு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனது கைவசம்தான் இருக்கிறது அதனால் கேட்கவில்லை. எனது சொத்தில் வாதிகள் கோரும் சொத்து எந்த பக்கத்தில் வருகிறது என்றால் அப்படி ஒரு சொத்தே இல்லை.

எனக்கு உரிமைப்பட்ட 9 1/4 சென்ட் சொத்தில் வாதி அத்துமீறக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை எதுவும் கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. எனக்கு உரிமைப்பட்ட சொத்தில் ஒத்தி இருக்கிறதா என்றால் இருக்கிறது. ஒத்தியை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் மரியம்மா என்பவர் எழுதிக்கொடுத்தார். மரியம்மாவை கட்சி சேர்க்க நான் தர்க்கம் போடவில்லை என்றாலும் மரியம்மா இறந்துவிட்டார். அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க தர்க்கம் செய்தேனா என்றால் தர்க்கம் செய்யவில்லை. எனது அப்பா ஒத்தியை ஒழிப்பித்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒத்தியை ஒழிப்பித்ததை காண்பிக்க நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

எனது அப்பாவை கட்சி சேர்க்க வேண்டும் என்று எதற்காக தர்க்கம் செய்தேன் என்றால் பழைய சர்வே எண் 2999 ல் என் அப்பாவிற்கும் பங்கு இருக்கிறது அதனால் கட்சி சேர்த்தேன். வாதி உரிமை கோரும் 9 1/4 சென்ட் சொத்தில் எனது அப்பாவிற்கு உரிமை உள்ளதா என்றால் எந்த பக்கம் அவர்கள் கோருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. குமாரசாமிக்கு உரிமைப்பட்ட சொத்தில் 38 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கினேன். செல்லப்பனுக்கு உரிமைப்பட்ட சொத்தை நான் விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். வாதி வழக்கு போட்ட சொத்து செல்லப்பனுக்குஉரிமைப்பட்ட சொத்தில் வருவதால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை இழுத்து அடிப்பதற்காக எனது அப்பாவை கட்சி சேர்க்கவேண்டுமென்று கூறி மனுதாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருக்கிறேன் ஆனால் அப்படி ஒரு இடம் அங்கு இல்லை.

தாவா சொத்து முழுக்க வாதிக்கு உரிமைப்பட்டது. நான் அதில் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல.